குறுக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் 3.30PM

அ.வ.எண்-39/2016 நாள்- 23.07.2019 மாரியப்பன்.த/பெ..பஞ்சநாதன்

PW1

3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா கோவில் என்பது பொது ஆவுடையார் கோவில் மேலும் அது மத்திய புரிஸ்வரர் கோவில் என்றும் அழைப்பர். இதனுடன் 2 கோவில்கள் சேர்ந்து உள்ளன என்றால் ஆமாம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோவில், அ.மி. பாலடி காத்தவராயர் சுவாமி கோவில். பொது ஆவுடையார் கோவில் ஒரு புராதன கோவில் என்றால் சரிதான். அந்த கோவில் யாரால் ஸ்தாபிதம் செய்யப்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். அந்த கோவிலில் வழிபடும் நபர் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழிபாடு என்றால் என்ன என்றால் சாமி கும்பிடுவது. அந்த கோவில் நிர்வாதகத்தில் எனக்கு எந்த பொறுப்பும் கிடையாது என்றால் சரிதான். அந்த கோவிலுக்கு மூலவர், உற்சவர் திருமேனிகள் உண்டா என்றால் இல்லை. சாமி புறப்பாடு உண்டா என்றால் இல்லை. அர்த்த மண்டபம் , முன் மண்டபம், மகா மண்டபம் உண்டா என்றால் உண்டு. கோவில் நிர்வாக பொறுப்பு யாரிடம் என்றால் அதற்கென்று அறங்காவலர்கள் 2 பேர் உள்ளனர். மேலும் நிர்வாக அதிகாரி ஒருவர் உள்ளார். இந்த கோவில் அறநிலையத்துறை ஆளுகைக்குட்பட்டது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி எந்த ஆண்டு அறங்காவலராக பொறுப்பெடுத்து கொண்டார் என்றால் நினைவில்லை. 5ம் பிரதிவாதி தனியாக அ.வ.எண்208/13 தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் 2012ம் ஆண்டிற்கான தொகையை கேட்டுள்ளார். நான் இந்த வழக்கில் 2013 முதல் 2015 வரையிலான ஆண்டிற்கான தொகையை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் 5ம் பிரதிவாதியின் பவர் ஏஜெண்ட் ஆவேன். அந்த பவர் பத்திரம்இன்னும் ரத்து செய்யப்படவில்லையென்றால் சரிதான். 5ம் பிரதிவாதியின் பவர்ஏஜெண்ட் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். 5ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கில் நிர்வாக அதிகாரி எதிர் வழக்குரைையை தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு நினைவில்லை. எனக்கு அந்த எதிர் வழக்குரைையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். அ.வ.எண்.208/13வழக்கில் நான் 6ம் பிரதிவாதி என்றாலும் அந்த வழக்கில் பி.வா.சா.1-ஆக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரிதான். இவ்வழக்கின் 5ம் பிரதிவாதி 2012ம் ஆண்டிற்கு பிறகு உரிய தொகையை கேட்டு வழக்கு ஏதும் பின்னிட்டு தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். அவர் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்208/13 வழக்கில் தனக்கு எதிராக முடிவு கிடைத்துவிடும் என்பதால் இந்த பின்னிட்டு வழக்குகள் ஏதும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் மனு போட்டு தரப்பினராக சேர்ந்துகொண்டேன் என்றால் சரிதான். பின்னிட்டு வழக்குகள் தாக்கல் செய்யாதது குறித்து என் முதல்வரான 5ம் பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்ய என் முதல்வரிடம் அனுமதி கேட்டேனா என்றால் இல்லை. ஒப்புதலும் பெறவில்லையென்றால் சரிதான். என் சுய விளம்பரத்திற்காக வேண்டி தேவையற்ற வழக்கினை திருக்கோவிலின் நிர்வாகத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருக்கோவிலின் ஸ்தலப்புராணம் எனக்கு ஓரளவு தெரியும். நான் சொல்லியுள்ள 2 முனிவர்கள்

யாரென்றால் வான்கோபர், மகாகோபர். அவர்கள் என்ன செய்தார்கள் என்றால் இருவருக்குள்ளும் முக்தி அடைய இல்லறம் சிறந்ததா, துறவறம் சிறந்ததா என்று சர்ச்சை ஏற்பட்ட போது இறைவன் தோன்றி 2 பேருக்குமிடையே மத்தியஸ்தம் செய்ததால் மத்திய புரிஸ்வரர் என்று கோவிலுக்கு பெயர் வந்தது. என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் திருக்கோவிலின் திருத்தல வரலாறு என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.1 . . கோவிலின் திருவிழா எந்த மாதம் என்றால் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதம் 4 திங்களும், மார்கழி மாதம் முதல் திங்கள் கிழமையும், தை மாதம் பொங்கலன்று திருவிழா. இந்த கோவிலின் நடை ஆண்டு முழுவதும் திறந்திருக்குமா என்றால் இல்லை. ஒவ்வொரு திங்கள் கிழமையும் இரவு 10 மணிக்கு நடை திறந்து மக்கள் செல்லும் வரை நடை திறந்து இருக்கும். அபிசேக ஆராதனை சரியாக இரவு 12 மணிக்கு நடக்கும். இந்த திருவிழாவிற்கு அழைப்பிதழ் உண்டு. அந்த அழைப்பிதழில் கார்த்திகை சோமவார திருவிழா என்றுதான் போடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இதில் முக்கியமானது கடைசி சோமவார திருவிழாவா என்றால் இல்லை. 4 திங்களும் முக்கியம்தான். கடைசி சோமாவாரத்தன்று சிறப்பு பேருந்துகள் இயக்கபடுமா என்றால் 4 திங்கள் கிழமையும் சிறப்பு பேருந்து இயக்கப்படும். எத்தனை நாள் திருவிழா நடக்கும் என்றால் திங்கள் கிழமை ஒரு நாள் தான். இந்த திருவிழாவின் போது காவடி, தேர் போன்ற நடைமுறை இல்லை. கோவிலில் திருமேனி ஏதும் இல்லை ஆலமரத்தில் திருவாசி வைத்து அருஉருவமாக அலங்காரம் செய்து வழிபடுவர். நான் சொல்வது போன்று உருவமில்லாமல் அலங்காரம் செய்யபடுவதில்லையென்றாலும் சிவலிங்கம் போல் அலங்காரம் செய்து வழிபாடு நடக்கும் என்ற விபரம் நான் கோவிலுக்கு போவாததால் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. அந்த ஆலமரம் எதை குறிக்கிறது என்றால் அது ஸ்தலவிருட்சம். வேறு முக்கியதுவமில்லை. சிதம்பர நடராஜர் ஆலமர வடிவில் இரவில் எழுந்தருளுவதாக ஐதீகம் என்றால் சரியல்ல. இந்த கோவில் பகலில் திறந்திருக்காது. பகலில் வழிபட வருவோர் எதனை வழிபடுவர் என்றால் கதவினை. கார்த்திகை சோமவார திருவிழாவின்போது நிறைய பக்தர்கள் வருவார்கள் என்றால் பல லட்சம் பேர் வருவர். கடைசி சோமவாரத்தன்று வெளி மாநிலம் மற்றும் வெளி நாட்டிலிருந்து பக்தர்கள் வருவர் என்றால் இல்லை. பக்தர்கள் எங்கிருந்து வருவர் என்றால் எங்கள் கிராமத்தை சுற்றியுள்ள பகுதியிலிருந்து வருவர். காலை 6 மணியிலிருந்து மறுநாள் காலை 6 மணி வரை பக்தர்கள் அங்கே தங்கி இருப்பார்கள் என்றால் இல்லை. அப்போது நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்வார்களா என்றால் தரிசனம் செய்து விட்டு சென்று விடுவார்கள். அவ்வாறு வரிசையில் சென்று வழிபடுவதற்காக வேண்டி தடுப்புகள் அமைகக்கபடும் என்றால் ஆமாம். நான் இந்த கோவிலுக்கு செல்வதில்லை என்றாலும் அதனால்தான் எனக்கு கோவிலின் வழிபாடு முறை குறித்து தெரியவில்லையென்றாலும் சரியல்ல. கார்த்திகை மாதம் தொடர்ந்து மழை பொழிய கூடிய காலம் என்றால் இல்லை. தொடர்ந்து மழை பெய்ய கூடிய காலம் என்பதால் பக்தர்கள் தங்கி வழிபாடு செய்வதற்கு இடம் கிடையாது என்றால் சரியல்ல இடம் உள்ளது. கோவில் வெட்ட வெளியில் உள்ளது என்றால் இல்லை 100மீ துாரத்தில் வீடுகள் உள்ளன. என் வீடும் 100மீ துாரத்தில் தான் உள்ளது. பக்தர்கள் தங்குவதற்காக கோவில நிர்வாகம் சார்பாக விழாக்காலங்களில் தகர கொட்டகை அமைத்து தற்காலிக தங்குமிடம் அமைக்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு தகர கொட்டகை அமைப்பதற்கு அறங்காவலர் தீர்மானம் உண்டு என்றால் சரிதான். தீர்மானத்திற்கு பிறகு அறநிலையத்துறை மேல் அதிகாரி அளவில் ஒப்புதல் பெறப்படும் என்றால் சரிதான். ஒப்புதலுக்கு பிறகு டென்டர் விளம்பரம் செய்வர் என்றால் சரிதான். அந்த டென்டரில் குறைந்தப்பட்ச விலைப்புள்ளி கோரப்படும் என்றால் சரிதான்.

விழாவிற்கு வரும் பக்தர்களுக்கு உணவளிக்க வேண்டி 6ம் பிரதிவாதி கோவில் நிர்வாக அனுமதிபெற்று அன்னதானம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த அன்னதானத்திற்கு முழு பொறுப்பு 6ம் பிரதிவாதியின் உடையது என்றால் சரிதான். 6ம் பிரதிவாதியின் பொறுப்பில்செய்யும் அன்னதானத்திற்கும் கோவில் நிர்வாகத்திற்கும் எவ்வித சம்மந்தம் கிடையாது என்றால் ஏதோ சம்மந்தம் இருக்கிறது. அன்னதானத்திற்காக கோவில் நிர்வாகத்திலிருந்து செலவு ஏதும் செய்வது இல்லையென்றால் அன்னதாக கொட்டகை மட்டும் போட்டு தருவர். நான் சொல்வது போன்று அது அன்னதான கொட்டகை கிடையாது என்றாலும்அது பக்தர்களுக்கு ஓய்வு எடுப்பதற்காக அமைக்கப்படும் கொட்டகை என்றாலும் சரியல்ல. அவ்வாறு கொட்டகை அமைப்பதனால் அறங்காவலர்களோ நிர்வாக அதிகாரிகளோ தனிப்பட்ட முறையில் எந்த பயனும் அடைவதில்லை என்றால் சரியல்ல கமிஷன் வாங்குகிறார்கள். நான் கமிஷன் வாங்குவதாக அபாண்டமாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தகர கொட்டகை அமைக்கபடாவிட்டால் மழைக்காலத்தில் வரும் பக்தர்களுக்கு பெருத்த இன்னல் ஏற்படும் என்றாலும் தகர கொட்டகை அமைப்பது ஒரு முறைக்கேடான செயலல்ல என்றாலும் சரியல்ல. பக்தர்கள் தரிசனம்செய்துவிட்டு லட்சக்கணக்கில் உண்டியலில் காணிக்கை செலுத்துகின்றனர் என்றால் சரிதான். பக்தர்களுக்கு உரிய வசதிகளை செய்து தராவிட்டால்அவர்களின் கூட்டம் குறையும் அதனால் உண்டியல்வருமானம் குறைந்து கோவிலுக்கு இழப்பு ஏற்படும் என்றால் சரியல்ல. சென்ற ஆண்டு நடைபெற்ற உண்டியல் காணிக்கை எண்ணும் நிகழ்வில் கலந்துகொண்டேனா என்றால் ஆமாம்.  உண்டியல் பதிவேட்டில் கையெழுத்து போட்டேனா என்றால் ஜனவரி மாதம் போட்டேன். வருமானம் எவ்வளவு வந்தது என்றால் 2017யை விட 2018ல் கஜா புயலின் தாக்கத்தை பொருட்படுத்தாமல் நிறைய வசூல் ஆனது. என்னுடைய வற்புறுத்தலின் பேரில் கடந்த ஆண்டு தகரகொட்டகை அமைக்கப்படவில்லையென்றால் சரியல்ல. சென்ற ஆண்டு தகர கொட்டகை போடவில்லையென்றால் சரிதான். தகர கொட்டகை அமைக்காததால் பக்தர்களின் வருகை குறைந்தது என்றாலும் பக்தர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளானர்கள் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதியால் வழக்கம் போல் அன்னதானம் செய்யவில்லை என்றால் சரியல்ல கோவிலில் போட்டார்கள். நான் சொல்வது போன்று கோவிலில் அன்னதானம் ஏதும் நடைபெறவில்லையென்றாலும் கோவில் ஊழியர்களுக்கு மட்டும் உணவு பரிமாறப்பட்டது என்றாலும் சரியல்ல. கொட்டகை போடாததால் உண்டியல் வருமானம் குறைந்தது என்றால் சரியல்ல. 1992ல் கோவில் சொத்துகளை விற்க கூடாது என்று 4ம் பிரதிவாதிக்கு எதிராக நான் வழக்கு போட்டேன் என்றால் சரிதான். அதில் கோவில் நிர்வாக அதிகாரியை சேர்க்கவில்லையென்றால் சரிதான். 6ம் பிரதிவாதி கோவில் நிர்வாகத்தில் எந்த வகையிலும் தலையிட்டது கிடையாது என்றால் சரியல்ல. நான்தான் கோவில் நிர்வாகத்தில் அதிகாரம் செலுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பாலு என்பவர்அந்த கோவிலின் எழுத்தர். அவர் எனக்கு கட்டுபட்டு விஸ்வாசமாமக நடந்து வந்தார் என்றால் சரியல்ல. கோவில் நிர்வாக அதிகாரி தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகு கோவில் நிர்வாகம் என் வசம் பேரில் வந்ததாக கருதிகொண்டு அதிகாரம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் உள்நோக்கத்துடன் செயல்பட்டு தகரகொட்டகை போட கூடாது என்று பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி முறையாக கணக்கு வழக்கு பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த புத்தகத்தைதான் நான் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம் ஆனால் கணக்கு சரியில்லை. 6ம் பிரதிவாதியிடம் அன்னதானத்திற்கு நன்கொடை வழங்கும் நபர்கள் யாரும் எந்த பிரச்சனை

செய்யவில்லையென்றால் எனக்கு தெரியாது. கோவிலுக்கு நஷ்டத்தையும் அவபெயரையும் ஏற்படுத்தும் நோக்கில் நானும் 5ம் பிரதிவாதியும் தேவையில்லாத வழக்கினை தாக்கல்செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

6ம் பிரதிவாதி தரப்பில்குறுக்கு விசாரணை

இந்த சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க 6ம் பிரதிவாதி தரப்பில் மனு கொடுத்து மனு அனுமதிக்கப்பட்டு இன்று சாட்சி ஆஜரானால் 6ம் பிரதிவாதி தரப்பில்சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய யாரும் முன் வராததால் 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று முடிக்கப்பட்டது.
மறு விசாரணை இல்லை.

இத்துடன் குறுக்கு விசாணை முடிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 4.35

Sd/- மாரியப்பன்

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- G. Sathiakumar,

District Munsif, Pattukkottai,(FAC)